Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**
Case No. **CC.NO. 92 /2023**

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 6 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. உலகநாதன் | **தொழில்** | காவல் ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. சன்னியாசி | **கிராமம்/ஊர்** | வடமாதிமங்கலம் |
| **வயது** | 52 | **மாவட்டம்** | திருவண்ணாமலை |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of June 2026

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

நான் தற்போது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன்.நான் கந்திலி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணியாற்றிய சமயம், கடந்த 24.10.2020 ம் தேதி காலை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. சிவாஜி அவர்கள் இதே காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது அ.சா.1, நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 918/2020 இதச பிரிவுகள் 279,304(A) ன் கீழ்முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர், மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை என் வசம் ஒப்படைத்தார். வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் கடந்த 25.10.2020 அன்று காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள், சரவணன் மற்றும் ராம்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ 5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் இவ்வழக்கின் சம்பவயிட சாட்சிகளான பார்வதி, சங்கர், கண்ணுபையன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று காலை 08.00 மணிமுதல் 10.00 வரை வழக்கு விபத்தில் இறப்புற்ற செல்வராஜ் என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். (**அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிரேத விசாரணை

சாட்சியான சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இறந்தவரின் பிரேதத்தை வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் –2748 திரு. சௌந்தர்ராஜன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 26.10.2020 அன்று 11.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்பு பிரேத பரிசோதனை அலுவலுக்கு நியமித்த காவலரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். அதன் பின்னிட்டு, இறந்தவரின் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரணை செய்து பிரேத பரிசோதனை அறிக்கையையும், வாக்குமூலமும் பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எனது புலன் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் அவர்கள் வசம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

24.10.2020 அன்று இரவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி என்னிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தார் . முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு யார் அனுப்பியது என்றால் உதவி ஆய்வாளர் அனுப்பியுள்ளார். முதல் தகவல் அறிக்கை நான்கு நாட்கள் காலதாமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதற்காக காரணம் என்னவென்றால், காரணம் ஏதும் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தில் ஓட்டுநரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், வாகனத்தின் பதிவு எண் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் எதிரியானவர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சாட்சி பழனிசாமி மற்றும் கண்ணுப்பையன் வாக்குமூலத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் என்பதால் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் எதிரியின் பெயர் மற்றும் முகவரி எனக்கு தெரியவந்தது என்றால், அந்த வண்டியின் **RC** புத்தகத்தில் குறிப்பிடபட்டுள்ள உரிமையாளரின் தந்தை தான் எதிரியாவார். வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் நாகரத்தினம் என்பவர் ஆவார். (மேற்படி ஆவணத்தில் பெயர் சரியாக தெரியவில்லை என்று சாட்சி கூறுகிறார்). விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொள்ளவில்லை. வாகனத்தின் உரிமையாளரை வழக்கில் சாட்சியாக சேர்த்திருந்தால் அரசு தரப்பு வழக்கு பாதிப்படையும் என்பதால் நான் அவரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தை யாரும் பெற்றுச் செல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. சுரேஷ் அவர்களிடம் ஒப்படைத்தேன் என்றால் **2021** மார்ச் மாதத்தில் ஒப்படைத்தேன். நான் **5** மாதங்கள் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டுள்ள போதிலும் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். அதற்கு என்ன காரணம் என்றால் வாகனத்திற்கான உரிய ஆவணங்கள்

சமர்ப்பிக்கப்படாததே காரணமாகும். இவ்வழக்கின் புகார்தார், இறப்பு ஏற்படுவதற்கு முன்பே புகார் அளித்தார். ஆனால் புகார்தாரர் விபத்தில் இறந்தவரை மருத்துவமனையில் பார்த்த பின்னர் தான் புகார் அளித்தாக என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் இறப்பதற்கு முன்பே தான் அளித்ததாக கூறியுள்ளார். விபத்து ஏற்படுத்தியவர் யார் என்று சரியாக தெரியாததால் எனது உத்தரவின் பேரில் காலதாமதமாக எதிரியின் மீது தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. மருத்துவரை விசாரித்தபோது, இருச்சக்கர வாகனத்தில் மோதப்பட்டால் இறந்தவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மருத்துவர் தனது விசாரணையில் கனரக வாகனங்கள் மோதினால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறியுள்ளதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது விபத்து ஏற்படுத்திய வாகனம் அங்கு இருந்ததா என்றால் சாலையின் ஓரமாக இருந்தது. மேற்படி வாகனம் குறித்து மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை வழக்கில் சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் சாட்சியாக இருவரை மட்டும் சேர்த்துள்ளேன். இவ்வழக்கின் ஆவணங்கள் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரி மீது புள்ளி விவரக் கணக்கிற்காக தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**Signature of Witness**

**Judicial Magistrate No.II**
**Tirupathur.**